**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.4879/ஆ5/2024, நாள்.04.12.2024**

.....

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – தேசிய வானிலை ஒலிம்பியாட் (National Meteorological Olympiad) (Met Olympiad) – 8ஆம் வகுப்பு, 9ஆம் வகுப்பு மற்றும் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு – ஆன்லைன் வினாடி வினா போட்டி – வழிமுறைகள் – சார்பு |
| பார்வை | சென்னை –6, பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.073040/எம்2/எஸ்2/2024, நாள். 02.12.2024 |

.....

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதத்திற்கிணங்க, இந்திய வானிலை ஆய்வுத் துறையானது, அறிவியல் கண்டுபிடிப்புகள் மற்றும் பொதுத் சேவையின் குறிப்பிடத்தக்க பயணத்தைக் குறிக்கும் வகையில், 15.01.2025 அன்று புதுதில்லியில் உள்ள பாரத் மண்படத்தில் 150–வது ஆண்டினை கொண்டாடுகிறது.

பள்ளிகளில் 8ஆம் வகுப்பு, 9ஆம் வகுப்பு மற்றும் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களிடையே வானிலை மற்றும் காலநிலை அறிவியல் பற்றிய ஆர்வத்தையும் விழிப்புணர்வையும் வளர்க்கும் நோக்கத்துடன், மெட் ஒலிம்பியாட் (Met Olympiad) ஒரு ஆன்லைன் வினாடி வினா போட்டியினை நடத்துகிறது. அன்லைன் வினாடி வினா போட்டிக்கு https://mausam.imd.gov.in/met-oly/ என்ற இணையதளத்தில் பாடத்திட்டம் மற்றும் பதிவுகள் மேற்கொள்ளலாம்.

<u>ஆன்லைன் வினாடி வினாவிற்கான நிகழ்வு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன–</u>

| | |
|---|---|
| Eligibility | Students of 8th, 9th and 11th standards |
| Commencement of Registration | 01 December 2024 |
| End of Registration | 10th December 2024 |
| State Level Test | 14-15th December 2024 (timing slots will be given) |
| State Level Result | 17th December 2024 |
| National – Level Camp & Contest | 14th January 2025 |
| IMD's Foundation Day Celebration & Distribution of Awards | 15th January 2025 |

மாநில மற்றும் தேசிய அளவிலான வெற்றியாளர்கள் அவர்களின் சாதனைகளுக்காக அங்கீகரிக்கப்படுவர். மேலும் வெற்றியாளர்கள் 15.01.2025 அன்று புதுதில்லியில் ஒரு நாள் பயிற்சி மற்றும் 150வது நிறுவன தின கொண்டாடங்களில் பங்கேற்கும் வாய்ப்பை பெறுவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணையதள முகவரி மற்றும் இப்பொருள் சார்பான விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. பள்ளிகளில் 8ஆம் வகுப்பு, 9ஆம் வகுப்பு மற்றும் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் Met-Olympiad ஆன்லைன் வினாடி வினா போட்டியில் பங்கேற்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்குமாறு மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு – பார்வையில் கடித நகல்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்)
வேலூர் மாவட்டம்,
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
நகல்–

1. சென்னை – 6, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள், அனைத்து வகை பள்ளிகள், வேலூர் மாவட்டம். (சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக)